9

Register No. 

# முழு ஆண்டுத் தேர்வு – 2024

கால அளவு : 2.30 மணி நேரம்

## சமூக அறிவியல்

மதிப்பெண்கள் : 100

### பகுதி – I

**I. சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக.** **14 x 1 = 14**

1. எகிப்து, இஸ்ரேல் – பாலஸ்தீனம் மற்றும் ஈராக் அடங்கிய பகுதி.............எனப்படுகிறது.
அ) பிறைநிலப் பகுதி ஆ) கிரேட் ரிஃப்ட் பள்ளத்தாக்கு இ) ஸோலோ ஆறு ஈ) நியாண்டர் பள்ளத்தாக்கு
2. கிரேக்கர்களின் மற்றொரு பெயர்...........ஆகும்.
அ) ஹெலனிஸ்டுகள் ஆ) ஹெலனியர்கள் இ) பீனிசியர்கள் ஈ) ஸ்பார்ட்டன்கள்
3. ......ஜப்பானின் பூர்வீக மதம் ஆகும்.
அ) ஷின்டோ ஆ) கன்பூசியானிசம் இ) தாவோயிசம் ஈ) அனிமிசம்
4. பிரான்சில் அரச சர்வாதிகாரத்தின் சின்னமாக ...........இருந்தது.
அ) வெர்செயில்ஸ் ஆ) பாஸ்டைல் சிறைச்சாலை இ) பாரிஸ் கம்யூன் ஈ) ஸ்டேட்ஸ் ஜெனரல்
5. பின்வருவனவற்றுள் சரியாக பொருந்துவது எது?
அ) வளைகுடா நீரோட்டம் – பசிபிக் பெருங்கடல் ஆ) லேப்ரடார் நீரோட்டம் – வட அட்லாண்டிக் பெருங்கடல்
இ) கேனரி கடல் நீரோட்டம் – மத்திய தரைக்கடல் ஈ) மொசாம்பிக் கடல் நீரோட்டம் – இந்தியப் பெருங்கடல்
6. ஒவ்வோர் ஆண்டும் உலக மக்கள் தொகை தினம்...........ஆம் நாள் கடைப்பிடிக்கப்படுகிறது.
அ) ஆகஸ்டு 11 ஆ) செப்டம்பர் 11 இ) ஜுலை 11 ஈ) ஜனவரி 11
7. விழு ! மூடிக்கொள் ! பிடித்துக்கொள்! என்பது எதற்கான ஒத்திகை?
அ) தீ ஆ) நிலநடுக்கம் இ) சுனாமி ஈ) கலவரம்
8. குடவோலை முறையைப் பின்பற்றியவர்கள்...............
அ) சேரர்கள் ஆ) பாண்டியர்கள் இ) சோழர்கள் ஈ) களப்பிரர்கள்
9. அழுத்தக்குழுக்கள் என்னும் சொல்லினை உருவாக்கிய நாடு..........
அ) அமெரிக்க ஐக்கிய நாடுகள் ஆ) இந்தியா இ) முன்னாள் சோவியத் யூனியன் ஈ) இங்கிலாந்து
10. இன ஒதுக்கல் (Apartheid) என்னும் கொள்கையைப் பின்பற்றிய நாடு..............
அ) தென் சூடான் ஆ) எகிப்து இ) தென் ஆப்பிரிக்கா ஈ) நைஜீரியா
11. ஊராட்சிகளின் ஆய்வாளராகச் செயல்படுகின்றவர்.........ஆவார்.
அ) ஆணையர் ஆ) மாவட்ட ஆட்சியர் இ) பகுதி உறுப்பினர் ஈ) மாநகரத் தலைவர்
12. ஜீ–8 நாடுகளின் கூட்டமைப்பின் உறுப்பு நாடுகளில் இல்லாத ஒன்று............
அ) ஜப்பான் ஆ) கனடா இ) ரஷ்யா ஈ) இந்தியா
13. இந்திய ரிசர்வ் வங்கியின் தலைமையிடம் இருக்கும் இடம்
அ) சென்னை ஆ) மும்பை இ) கொல்கத்தா ஈ) டெல்லி
14. வெளி குடியேற்றப் பதிவில் முன்னிலை வகிக்கும் மாவட்டம்...............
அ) இராமநாதபுரம் ஆ) கோயம்புத்தூர் இ) சென்னை ஈ) வேலூர்

### பகுதி – II

**II. எவையேனும் பத்து வினாக்களுக்கு மட்டும் விடையளி. வினா எண்.28 க்கு கட்டாயமாக விடையளி.** **10 x 2 = 20**

15. சிதுரர்களின் முக்கியமான பண்புகளைக் கூறுக.
16. மும்மணிகள் (திரிரத்னா) – இச்சொல்லை விளக்கிக் கூறு.
17. புனித சோபியா – ஆலயம் பற்றி எழுதுக.
18. சீனப் பெருஞ்சுவர் பற்றி குறிப்பு வரைக.
19. பருத்தி நெசவில் இந்தியர் பெற்றிருந்த இயற்கையான சாதகங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

20. கொலம்பியப் பரிமாற்றம் என்றால் என்ன?
21. ஆழிப்பேரலைகள் என்றால் என்ன?
22. தொங்கும் பள்ளத்தாக்கு என்றால் என்ன?
23. காலநிலையைப் பாதிக்கும் காரணிகள் யாவை?
24. ஆபிரகாம் லிங்கனின் மக்களாட்சிக்கான வரையறையை கூறுக.
25. அழுத்தக் குழுக்கள் என்றால் என்ன?
26. போக்சா – வரையறு.
27. பொருளாதாரத்திலுள்ள மூன்று துறைகள் யாவை?
28. பசிபிக் நெருப்பு வளையம் பற்றி குறிப்பு எழுதுக.

## பகுதி – III

**III. எவையேனும் பத்து வினாக்களுக்கு விடையளி. (வினா எண்.42 கட்டாய வினா).** **10 x 5 = 50**

29. கோடிட்ட இடங்களை நிரப்புக.
அ) ..........என்பது மனிதத் தலையும், சிங்க உடலும் கொண்ட, கல்லால் ஆன மிகப்பெரிய உருவம்.
ஆ) ..........என்பது மெதினாவின் முந்தையப் பெயர் ஆகும்.
இ) இந்திய ரிசர்வ் வங்கியின் முதல் அச்சகம் தொடங்கப்பட்ட இடம்..............
ஈ) இந்தியாவில்..............கட்சி முறை பின்பற்றப்படுகிறது.
உ) தமிழக மக்களில் பெரும்பான்மையினர் நம்பியுள்ள தொழில்..........
30. சிந்துவெளி நாகரீகத்தின் மறைந்த பொக்கிஷங்களைப் பற்றி எழுதுக.
31. சமண, புத்த சமயக் கொள்கைகளுக்கு இடையே உள்ள ஒற்றுமைகள் மற்றும் வேற்றுமைகளை எழுதுக.
32. கி.பி. 1789–ம் ஆண்டு புரட்சிக்குப் பிரெஞ்சுத் தத்துவ ஞானிகளின் பங்களிப்பினை விவரிக்கவும்.
33. வேறுபடுத்துக. அ) கவசம் மற்றும் கருவம் ஆ) நிலக்காற்று மற்றும் கடல் காற்று
காரணம் கூறுக : மக்கள் தொகை வளர்ச்சி கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்படவேண்டும்.
34. தீ விபத்தின்போது என்ன செய்யவேண்டும் என்பதைப் பற்றி குறிப்பு வரைக.
35. புவி அமைப்பை விவரி.
36. இந்தியாவில் மக்களாட்சி பற்றிய உங்களது கருத்து என்ன?
37. அரசியல் கட்சிகளின் செயல்பாடுகள் யாவை?
38. அடிப்படைக் கடமைகள் என்றால் என்ன? அவற்றை எவ்வாறு உன் பள்ளி வளாகத்தில் செயல்படுத்துவாய்?
39. பணத்தின செயல்பாடுகளைப் பட்டியலிடுக.
40. வேளாண் நீர் ஆதாரம் பற்றி ஆய்வு செய்க.
41. தொழிற்புரட்சியின் முக்கிய கண்டுபிடிப்புகளின் ஆண்டுகளை 1700 முதல் 1765 வரை காலக்கோட்டில் வரைக.
42. கீழ்க்கண்டவற்றை இந்திய வரைபடத்தில் குறிக்கவும்.
அ) சென்னை ஆ) மதுரை இ) வங்காளம் ஈ) மும்பை ஈ) புதுடெல்லி

## பகுதி – IV

**IV. கீழ்க்கண்ட வினாவிற்கு விரிவான விடையளி.** **2 x 8 = 16**

43. அ) விவசாயம், பானை செய்தல், உலோகக் கருவிகள் செய்தல் ஆகிய துறைகளில் நிகழ்ந்த வளர்ச்சி பெருங்கற்காலத்தில் ஏற்பட்ட மிக முக்கியமான மாற்றமாகும் – உறுதிப்படுத்தவும். **(அல்லது)**
ஆ) இங்கிலாந்தின் தொழிற்புரட்சியினால் இந்தியாவில் ஏற்பட்ட விளைவுகள் யாவை?
44. அ) **உலக வரைபடத்தில் கீழ்க்காணும் இடங்களை குறித்துக் காட்டுக.**
அ) சிந்து சமவெளி நாகரீகம் ஆ) ஜப்பான் இ) ஆசியா ஈ) பசிபிக் பெருங்கடல் உ) மத்திய தரைக்கடல் ஊ) இந்தோனேஷிய நிலநடுக்கப் பகுதி எ) கேனரி குளிர் நீரோட்டம் ஏ) வாஸ்கோடகாமாவின் கடல்வழி
**(அல்லது)**
ஆ) **உலக வரைபடத்தில் குறிக்கவும்.**
ஆ) பசிபிக் நெருப்பு வளையம் ஆ) இங்கிலாந்து இ) ரோம் ஈ) ஆஸ்திரேலியா உ) பிரேசில் வெப்ப நீரோட்டம் ஊ) ஆல்ப்ஸ் மலை எ) அட்லாண்டிக் பெருங்கடல் உ) சகாரா வெப்ப பாலைவனம்